Registered No. M. 8380.
" SIDDHANTHAM "
Vol. 15—No. 8

REGISTRAR OF BOOKS
42

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே "

| மலர் 15 | சித்திரபானு ஆண்டு ஆவணித் திங்கள் 1942ஆம் ஆகஸ்டுமீ | இதழ் 8 |
|---|---|---|

உள்ளுறை

| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| மெய்கண்ட சாத்திரக் கட்டளை | ... | 305 |
| சிவஞான சித்தியார் சுபக்கம் மூலமும் சிவாக்கிர யோகிகள் உரையும் | ... | 321 |

பத்திராசிரியர் : திரு. வி. உலகநாத முதலியார்

சித்தாந்த மகாசமாஜம்
கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

1942 தனிப் பிரதி அணா 4.

# ஞானியார் சுவாமிகள் நினைவு நிதி

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளுடைய நினைவு நிதிக்குக் கீழே குறித்துள்ள அன்பர்கள் பொருளுதவி புரிந்துள்ளார்கள். ஏனைய அன்பர்களும் விரைவில் தாங்கள் விரும்பிக் கொடுக்கக் கருதும் பொருளை விரைவில் கொடுத்து உதவி புரியுமாறு வேண்டுகிறேன்.

| திருமிகு | | ரூ. | அ. |
|---|---|---|---|
| க. அரங்கசுவாமி முதலியாரவர்கள் | ... | 108 | 0 |
| அ. கு. காமாக்ஷியம்மையாரவர்கள் | ... | 100 | 0 |
| மயிலைகிழார் இளமுருகனு[illegible] | ... | 100 | 0 |
| திவான்பகதூர். டி. எம். நார[illegible]மி பிள்ளையவர்கள் | | 50 | 0 |
| ராவ்பகதூர். சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் | | 50 | 0 |
| ராவ்சாஹிப்-எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் | ... | 50 | 0 |
| ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் | ... | 25 | 0 |
| மு. அருணசலம் பிள்ளையவர்கள் | ... | 20 | 0 |
| தெ. பழ. சித. சதாசிவம் செட்டியாரவர்கள் | ... | 16 | 0 |
| தி. க. சுந்தரம் பிள்ளையவர்கள் | ... | 10 | 0 |
| தலைவர், சைவ சித்தாந்த சபை, பழநி | ... | 10 | 0 |
| கா. இராமநாதன் செட்டியாரவர்கள் | ... | 6 | 4 |
| கொழும்பு அருள் தியாகராசா அவர்கள் | ... | 5 | 0 |
| என். எஸ். இரத்தினசபாபதி செட்டியாரவர்கள் | ... | 5 | 0 |
| K. A. சிவஞானம் பிள்ளை அவர்கள், வழக்கறிஞர், அம்பாள்சமுத்திரம் | ... | 5 | 0 |
| | ஆ | 560 | 4 |

ம. பாலசுப்பிரமணியன்,
காரியதரிசி

---

## பாராட்டுக் கூட்டம்

பண்டிதமணி - மு. கதிரேசஞ் செட்டியார் அவர்கட்கு, அரசாங்கத்தார் மஹாமஹோபாத்தியாயா என்னும் பட்டம் அளித்ததற்காகக் கொழும்பு விவேகானந்த சபையில் பாராட்டற் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

Reg. M. 2330

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.



| மலர் 15 | சித்திரபானு ஆண்டு ஆவணித் திங்கள் 1942ஆம் ஆகஸ்டுமீ | இதழ் 8 |
|---|---|---|



## மெய்கண்ட சாத்திரக் கட்டளை

மு. அருணாசலம்

[கட்டளைகளைப் பற்றிய விரிவான குறிப்பை சித்தாந்தம் மலர் கரு, இதழ் அ-ல் வெளியான தசக்கிரமக்கட்டளையின் முன்னுரையில் (பக்கம் 353-5) காணலாம். கீழே வெளியிடப் படும் கட்டளையானது இதுகாறும் அச்சில் வராதது; பெரும் பான்மையும் திருவாலவாய்க் கட்டளையை ஒத்திருக்கிறது. அரசாங்கத்துத் தொன்னூல் நிலயத்திலுள்ள ஓரேட்டிலிருந்து பிரதி செய்யப்பட்டு இங்கே வெளியிடப் பெறுகிறது. ஏட்டில் இதன் பெயர் காணப்படவில்லை. இதனுள் மெய்கண்ட சாத்திரத்தின் மார்க்கம் கூறப்படுவதாக இதன் இறுதி வாக்கியம் உரைப்பதால், மெய்கண்ட சாத்திரக் கட்டளை என்ற பெயர் இதற்கு அமைக்கப்பட்டது.]

# சித்தாந்தம்

## முப்பொருள்

சிவாகமஞ் சொல்லும் பொருளாவது, பதி பசு பாசம் மூன்று. இதிற் பதியாவது சிவம் ; பசுவாவது ஆன்மா; பாசமாவது ஆணவம் கன்மம் மாயை. ஆக இவை ஐந்து பொருளும் அனாதியாய், நித்தியமாய், தோற்ற நாசமில்லாததாய், காலம்போல வியாபகமாய், அருவும் உருவும் அருவுருவு மல்லவாய், வெவ்வேறு சத்தியையுடையதாய், ஒரு வடிவும் ஒரு நிறமும் ஒரு சுடருமில்லாததாய், அப்பிரமேயமாயறிவதாயிருக்கும்.

## பதியிலக்கணம்

இதிற் சிவமாவது, ஒன்றாய், சருவ வியாபகமாய், சித்தாய், நின்மலமாய், நிரஞ்சனமாய், மலரகிதமாய், மலவயிரியாய், பொய்ப்பகையாய், உயிர்க்குயிராய், அறிவுக்கறிவாய், ஒரு குணமு மில்லாததாய், எண்ணிறந்த குணமுடையதாய், ஒரு பெயரு மில்லாததாய், எண்ணிறந்த காரணப் பெயருடையதாய், அறிவிற்றோன்றும் பொருளாய், ஆனந்தமயமாய், அளவுபடாததாய், அளவுபடுவதாய், சடசித்து இரண்டினுங் கலப்பாய், சர்வகிருத்தியத்தையும் சர்வானுக்கிரகத்தையு முடையதாய், தனக்குமேலொன்று மில்லாததாய், எப்பொருட்குந் தாரகமாய், எப்பொருளையுங் காரியப்படுத்துவதாய், இரக்கமயமாய், தன்னையடைந்தவர்களுக்குச் சுகத்தைக் கொடுக்கிறதுமாய், தற்பிரயோசனமில்லாததாய், சுத்தமான ஆன்மாவினிடத்திலே விளங்கித் தோன்றுவதாய், வேதாகமச் சொரூபியாயிருக்கும்.

இந்தப் பரமசிவத்துக்கு, ஆன்மாக்களுக்கு முத்தியைச் செய்விக்கும் பராசக்தியும், பெத்தத்தைச் செய்விக்கும் ஆதிசக்தியும், கிருபையாய் இச்சையைச் செலுத்துவிக்கும் இச்சாசக்தியும், எல்லாருஞ் செய்யப்பட்ட கன்மத்தையறியும் ஞானசக்தியும், உலகம் யாவையுஞ் செய்வித்துங்

கிரியா சக்தியும் ஆகப் பஞ்சசத்திகளாகிய அருளும் பின்னமில்லாமல், சூரியனுங் கிரணமும்போல ஒன்றுயிருக்கும்.

இப்படியிருக்கிற பரமசிவமும் பராசக்தியும், கிருபையினுலே ஆன்மாக்களுடைய மலபெந்தங்களை நீக்குவிக்கும் பொருட்டு, அருவமாகிய சிவம் சத்தி நாதம் விந்து ஆக ௪ ; அருவுருவாகிய சதாசிவம் மனோன்மணி ஆக ௨ ; உருவமாகிய மயேசுரம் மயேசுவரி, உருத்திரன் பார்வதி, விட்டுணு இலக்குமி, பிரும்மா சரசுவதி ஆக ௮; ஆக கச; இதில் சிவபதம் ௭, சத்திபதம் ௭ ; இதில் ஒவ்வொரு மூர்த்தத்தில் பலபல பேதமாகவுந் திருமேனிகொண்டு, [1]உபாதானத் திரயங்களைக் கொண்டு எல்லா அண்டங்களையும் எல்லா உலகங்களையும் சிருட்டித்து, எல்லா ஆன்மாக்களுக்கும் சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரகங்களைச் செய்து, பக்குவப்பட்ட ஆன்மாக்களை யெல்லாந் தமது சிபாதத்திலே சேர்த்துப் பேரின்பத்தைக் கொடுப்பார்.

அதெப்படிச் செய்வரென்னில், தன்மை முன்னிலை படர்க்கையாக நின்று செய்வர். அவற்றில் தன்மையாவது, பரிபூரணமாய் அறிவுக்கறிவா யிருத்தல் ; முன்னிலையாவது, இச்சா ஞானக் கிரியா சத்திகளா யிருத்தல் ; படர்க்கையாவது, தனது இச்சா ஞானக் கிரியா சத்திகள் பஞ்சகர்த்தாக்களைச் செலுத்த, பஞ்சகர்த்தாக்கள் பஞ்ச அக்கரங்களைச் செலுத்த, இப்படிக் காரியப்படுத்துதல். இப்படிப் பிரபஞ்சத்தைக் காரியப்படுத்துகையிலேயும், பஞ்ச கிருத்திய நிமித்தம் அனந்த வடிவாகத் திருமேனி யெடுத்து இரட்சித்தும், உலகத்திலே மூர்த்தி தலம் தீர்த்த வடிவாயிருந்து சிவபுண்ணியத்தைக் கொடுத்தும், அத்துவாவும் அட்டமூர்த்தமுமா யிருந்தியற்றியும் தானதில் தாக்கற்று நிற்பன். இப்படிப் பதியிலக்கண மறிக.

---

[1] உபாதானத்திரயம் - விந்து மோகினி மான் (சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயை) ஆகிய முதற்காரணங்கள் மூன்று.

### பசு இலக்கணம்

இனி ஆன்மாவாவது, அனேகமாய், வசிப்பைப் பற்றின வியாபகமாய், அடுத்ததின் தன்மையா யிருப்பதாய், தனித்து நிற்கிற தல்லவாய், சித்தாய், இச்சிப்பித்தால் இச்சிக்கும் இச்சையுடையதாய், அறிவித்தால் அறியும் அறிவையுடையதாய், செய்வித்தாற் செய்யுஞ் செய்கியை யுடையதாய், ஒன்றிலே பெந்தப்படுவதாய், பெத்த முத்தியடைவதாய், எக்காலமுஞ் சீவனத்தையுடையதாய், சீவனுக்கு இருக்குமிடமாய், ஆன்மா, பசு, சீவன், புருடன், புமான், தேகி, கிஞ்சிஞ்ஞன், சுதந்தர ஹீனன், பரதந்திரன், அகர்த்தா, அணு, அறியாதவன், உள்ளம், சைதன்னியன், புத்தி, பிரகிருதி, பிராணன், சதசத்து, ஞாதுரு, புட்கலன் என்கிற காரணப் பெயரையுடையதா யிருக்கும்.

இந்த ஆன்மாக்கள் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்று மூன்று விதமாயிருக்கும். இதில் விஞ்ஞானகலராவார், அட்டவித்தியேசுரர் அனுசதாசிவர் சத்தகோடி மகாமந்திரர். இவர்கள் ஆணவ மலமொன்றையு முடையவர்கள். இவர்களுக்குச் சுத்தமாயா தத்துவம் தனுகரண புவன போகமாயிருக்கும். இவர்களில் பக்குவர்க்கு அனுக்கிரகிக்கும் முறைமை எப்படியென்னில், சிவன் அறிவிலே நின்று திருவருளுதிப்பித்து, மலமொன்றையும் போக்கி, மோட்சத்தைக் கொடுப்பர்.

இனி பிரளயாகலராவார், நூற்றுப்பதினெட்டு ருத்திரரும் புவன கர்த்தாக்களுமா யிருப்பார்கள். இவர்கள் ஆணவம் கன்மமாகிய இரண்டு மலத்தையு முடையவர்கள். இவர்களுக்கு அசுத்தமாயா தத்துவம் தனு கரண புவன போகமா யிருக்கும். இவர்களிற் பக்குவர்க்கு அனுக்கிரகிக்கும் முறைமை எப்படி யென்னில், சிவன் மானும் மழுவும் சதுர்ப்புயமும், காளகண்டமும், திரிநேத்திரமுமுடைய திருமேனி கொண்டெழுந்தருளி, இரண்டு மலத்தையும் போக்கி, மோட்சத்தைக் கொடுப்பர்.

இனி சகலராவார், விட்டுணு பிரும்மா முதல் கிருமி யீறுக அனேகம் உளர். இவர்கள் ஆணவம் கன்மம் மாயை ஆக மூன்று மலத்தையு முடையவர்கள். இவர்களுக்குப் பிரகிருதிமாயா தத்துவம் தனு கரண புவன போகமா யிருக்கும்.

இதில் தனுவாவது, அண்டசம் சுவேதசம் உற்பீசம் சராயுசம் ஆக நாலுவகைப் பிறப்பினுந் தேவர்கள்பதினொரு நூருயிரம், மானிடர் ஒன்பது நூருயிரம், நாற்காலிகள் பத்து நூருயிரம், பறவை பத்து நூருயிரம், நீருறைவன பத்து நூருயிரம், ஊர்வன பதினைந்து நூருயிரம், தாவரம் பத்தொன்பது நூருயிரம்; ஆக எழுவகைத்தோற்றத்தினும் எண்பத்துநாலு நூருயிரம் யோனி. இதில் ஒன்றில் அனேகமாம். இது சத்தப் பரிச ரூப ரச கெந்தம் மனம் புத்தி யாங்காரமாகிய சூக்கும தேகமாகவும்,[1]தோலிரத்த மிறைச்சி மேதையென்பு மச்சை சுவேதநீராகிய ஸ்தூல தேகமாகவும் பூதசரீரம் பூதசாரசரீரம் பூதபரிணமசரீரமாகவுமிருக்கும். ஆயுசு, கணிக முதலனேகமுள.

கரணமாவது அந்தந்தத் தத்துவமா யிருக்கும். அவையே தென்னில், தாவரம் ஓரறிவு; நந்து அட்டை ஈரறிவு; எறும்பு முதலிய மூவறிவு; பாம்பு முதலிய நாலறிவு; விலங்கு பட்சி ஐயறிவு; மானிடர் தேவர் ஆறறிவு. இப்படி விரித்தறிக.

புவனமாவது, இருநாற் றிருபத்து நாலு புவனமாகிய ஊரும் நாடும் தேசமும் உலகுமான சொர்க்கம் நரகம் பூமி யெனவாகிய அண்டங்கள் எண்ணிறந்தன.

போகமாவது, அவரவர் கன்மத்துக் கேதுவாகவும் அந்தந் தத் தனுவுக் கிணங்கினவாகவும் உண்பன சுவைப்பன குடிப்பன கடிப்பன மெல்வன விழுங்குவன உடுப்பன படுப்பன பூணுவன பூசுவன கொடுப்பன வாங்குவன காண்பன கேட்

---

[1] சித்தியார், பரபக்கம் ௫௯.

பன நடப்பன கிடப்பன, ஸ்திரி பிள்ளை சுற்றம் பொன் பூமி வியாதி இது முதலியது, இன்ப துன்பத்துக் கிடமாய், சொர்க்கம் நரகம் பூமி மூன்றிலும் சத்தப் பரிச ரூப ரச கெந்தமா யிருக்கும்.

இனி, இவர்கள் சூக்கும தேகத்தைப் பொருந்தி, கன்மத் துக் கேதுவாகிய ஸ்தூல தேகத்தை யெடுத்து, எடுத்த தேகந் தானாய் நின்று, இன்ப துன்பத்தைப் பொசித்து, நல்வினை தீவினைகளை யார்ச்சித்து, இன்பத்துக்கேதுவான சுவர்க்கத்தி லும் துன்பத்திற் கேதுவான நரகத்திலும் இன்ப துன்பத்திற் கேதுவான பூமியிலும் போக்கு வரவுடைத்தா யிருப்பார் கள். இவர்கள் மோட்ச மடைவதெப்படி யென்னில், தான் இச்சியாதே வரும் அபுத்தி பூர்வமும், தான் இச்சித்துச் செய்யும் புத்தி பூர்வமும், போகங்களை விரும்பிச் செய்யும் உபாயச் சரியை கிரியாயோக ஞானமும், மோட்சத்தை விரும்பிச் செய்யும் உண்மைச் சரியை கிரியாயோக ஞான மும், ஆகப் பத்து விதமாகிய சிவபுண்ணியத்தால் மோட் சத்தை யடைவர். அதெப்படி யென்னில், அபுத்தி பூர்வத் துக்குப் பலன் நல்ல தனுவைக் கொடுக்கும்; புத்தி பூர்வத் திற்குப் பலன் நல்லறிவை நிறுத்திக் கொடுக்கும்; உபாயச் சரியை கிரியா யோக ஞானத்துக்குப் பலன் ஆர்ச்சித்தபடிப் பொசிப்பித்து உண்மையறிவைக் கொடுக்கும்; உண்மைச் சரியை கிரியா யோக ஞானத்துக்குப் பலன், சாலோக சாமீப சாரூபமென்னும் பதமுத்திகளை யடைவித்து, மலபரிபாகஞ் சத்திநிபாதம் இருவினையொப்பு உண்டாக்கி, நல்ல தலத் திலே நல்ல குலத்திலே பிறப்பித்து, சாத்துவிக குணத்தைக் கொடுத்து, உண்மைஞானமென்னும் மோட்சத்தை விரும் பப் பண்ணுவிக்கும்.

இப்படி விரும்பின பேர்களுக்கு உண்மை ஞானமென் னும் மோட்சத்தைக் கொடுக்கவும், மற்றும் மூவர்க்கும் அவ ரவர் பாதத்தை அனுக்கிரகம் பண்ணவும், சதாசிவமாகிய பரமசிவம் தம்முடைய திருமேனியை யொழித்து, மானிடச்

சட்டை சாத்தி, இவர்கள் [1]ஊரும் பேரும் உருவுங் கெடுக்க வேண்டி, ஊரும் பேரும் உருவுங் கொண்டு, மானைக் காட்டி மானைப் பிடித்தாற்போல, ஆசாரிய மூர்த்தமாய்த் திருமேனி கொண்டெழுந்தருளி வந்து, மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரம் என்கிற சத்திநிபாதத் தன்மையை யறிந்து ஞானத்தாலாவது கிரியையாலாவது சமயதீட்சை பண்ணி, மற்ற ஆறு தீட்சையினாலும் ஆறத்துவாவையுஞ் சோதித்து, மல மாயை கன்மங்களாகிய கேவல சகல மிரண்டவத்தை யும் போக்கி, சுத்தாவத்தை யென்னும் உண்மை ஞானத்தை அனுக்கிரகித்து, மோட்சத்தைக் கொடுப்பர். இப்படி ஆன்மாவிலக்கண மறிக.

## பாச இலக்கணம் - ஆணவம்

இனி ஆணவமாவது, ஒன்ருய், வியாபகமாய், சடமாய், பரிபாகத்திலே நீங்குஞ் சத்தியையுடையதாய், மூலமலமாய், இருளும் பிரகாசமென்ன இருண்டதாய், தன்னையும் ஆன்மாவையும் சிவத்தையுந் தெரியவொட்டாமல் மறைப்ப தாய், ஆன்மாக்களுக்கு அநாதியிலே பெந்தமாய், இச்சா ஞானக் கிரியைகளை மறைப்பதாய், மற்ற இரண்டு மலங் களையுந் தன்வசத் தாக்குவதாய், மயக்குந் தன்மையை யுடையதாய், பொய்க்குக் காரணமாய், அருள் பிரகாசித்த விடத்து அப்பிரகாசப்படுவதாய், மலம் பசுத்துவம் அஞ் ஞானம் மூர்ச்சை அவித்தை மம்மர் விருதி(?) மறைப்பு இருள் மாசு குற்றம் என்னும் பெயரையுடையதாயிருக்கும்.

## கன்மம்

இனி கன்மமாவது, ஒன்ருய், வியாபகமாய், சடமாய், அந்தந்த அணுக்கள்தோறும் வெவ்வேறு கன்மமாய், மன வாக்குக் காயங்களினாலும் அறிந்தும் அறியாமலும்

[1]" ஊரும் பேரும் உருவுங் கொண்டென் - ஊரும் பேரும் உரு வுங் கெடுத்த...சைவ சிகாமணி" : இருபா இருபஃது, ச. 14 - 17.

வருகிறதாய், சுகதுக்கத்தைப் பண்ணுவதாய், இதாவகிதங்களினலே ஆவதாய், நல்வினை தீவினையாய், புண்ணிய பாவமாய், இன்ப துன்பமாய், அனுபவித்தாலொழிந்து தீராதநாய், ஒன்றினலொன்றழிக்கப்படாததாய், விதிப்படி பரிகாரஞ் செய்தால் நீங்குகிறதுமாய், விலைக்குக் கொண்டாற் பலிக்கிறதுமாய், காமிக்கப்படுவதாய், பிரவாகாநாதியாக வருவதாய், பசுபுண்ணியம் பசுத்துரோகமாய், சிவபுண்ணியம் சிவத்துரோகமாய், மலத்தோடுஞ் சிவத்தோடுங் காரியப்படுவதாய், மலத்தை நீக்கும் தன்மையையுடையதாயிருக்கும். இந்தக் கன்மமாவது, சஞ்சிதம் பிராரத்தம் ஆகாமியம் என்று மூன்று விதமாயிருக்கும்.

இதிற் சஞ்சிதமாவது, அநாதி தொடுத்துச் செனனந்தோறும் ஆர்ச்சித்த வினையைப் பொசித்து மிஞ்சினது; ஆறத்துவாவிலுங் கட்டுப்பட்டிருக்கிற புண்ணிய பாவமாய், ஆசாரியர் திருநோக்கத் திட்சையினலே திருவதாயிருக்கும்.

பிராரத்தமாவது, சஞ்சிதத்திற் சிறிது பொசிக்க, பாகப்பட்ட வினைக்கிடாக எடுத்த தேகத்துக்கடுத்த [1]பேறிழவின்பம் பிணி மூப்புச் சாக்காடென்று வந்து பொருந்தும் இன்ப துன்பமாய், சிவாற்புதஞ் செய்ய நீங்குகிறதுமாயிருக்கும்.

ஆகாமியமாவது, அநாதி தொடுத்து மோட்ச பரியந்தம் ஆன்மாக்களைப் பிராரத்தம் பொசிக்கையிலே வந்து ஏறுகிற இதாவகிதங்களான நல்வினையாய் ஆசாரியர் அனுக்கிரகித்தவிடத்து நீங்குகிறதுமா யிருக்கும்.

**மாயை**

இனி மாயையாவது, ஒன்ருய், வியாபகமாய், உலகத்துக்குக் காரணமாய், எல்லா ஆன்மாக்களுக்குந் தாரகமாய், வெவ்வேறு நிறங்குறி குணஞ்செயலுடையதாய், சடமாய்,

[1] "பேறிழ வின்ப மோடு பிணிமூப்புச் சாக்கா டென்னும் - ஆறும்முன் கருவுட் பட்டது" : சித்தியார் சுபக்கம், ௬௬.

எல்லா ஆன்மாக்களுக்குங் கன்மத்தை ஆர்ச்சிக்கவும் அனுப விக்கவும் இடமாய், எண்ணிறந்த தத்துவங்களைத் தோற்று வித்து ஒடுக்குவதாய், அருவும் உருவும் அருவுருவுமாகுந் தன்மையையுடையதாய், ஆன்மாவுக்குமிடமாய், சுத்தம் அசுத்தம் சுத்தாசுத்தமுமாகிறதாய், மயக்குந்தன்மையுடை யதாய், உலகப் பொருளைத் தெரிவிக்கும் ஒளியாய், பொய் யும் மெய்யுமாகுந் தன்மையையுடையதாய், அழியப்படுவ தாய், கர்த்தாவினுலே தொழிற்படுவதாய், சிவபேதஞ் சத்தி பேதத்துக் கிடமாய், மலத்தை நீக்குந்தன்மை யுடையதாய் சிவசத்திக்கொரு சத்தியாய், பசுகரணஞ் சிவகரணமாகுந் தன்மையையுடையதா யிருக்கும். இந்த மாயை, சுத்த மாயை அசுத்தமாயை என இரண்டாய், பின்பு அசுத்த மாயையினில் பிரகிருதி மாயையாய், ஆக மூன்று மாயையா யிருக்கும்.

இதிற் சுத்தமாயையாவது, விஞ்ஞானகலருக்குத் தனு கரண புவன போகமாய், பிரளயாகலருக்குச் செலுத்துந் தத்துவமாயிருக்கும்.

அசுத்தமாயையாவது, பிரளயாகலருக்குத் தனு கரண புவன போகமாய், சகலருக்கு அறிவிக்குந் தத்துவமா யிருக்கும்.

பிரகிருதிமாயையாவது, சகலருக்குத் தனு கரண புவன போகமாயிருக்கும்.

### தத்துவங்களின் தோற்றம், ஒடுக்கம்

இதிற் சகலருக்குத் தனுகரண புவனபோகமாகிய தத்துவமும் அறிவிக்குந் தத்துவமும் பிரேரக தத்துவமும் தோற்றமொடுக்கம் எப்படியென்னில், பரமசிவனுடைய பராசத்தி யருளினுலே சுத்தமாயையிலே நாதமும், நாதத் திலே விந்துவும், விந்துவிலே சாதாக்கியமும், சாதாக்கியத் திலே மயேசுரமும், மயேசுரத்திலே சுத்தவித்தையும் ஆக

அஞ்சுந் தோன்றும். முன்சொன்ன விந்துவிலே, நாலுவாக்கும் ஐம்பத்தோரக்கரமும் எண்பத்தொரு பதமும் சத்த கோடி மகாமந்திரமும் வேதாகம புராண சாத்திர முதலிய நூல்களும் சரியை கிரியா யோகத்தினின்றோர்க்குச் சாலோக சாமீப சாரூபமென்னும் பதமுத்திகளும் பஞ்ச கலைகளும் தோன்றும்.

அனந்ததேவ நாயனாரருளினாலே அசுத்தமாயையிலே காலமும் நியதியும் கலையுந் தோன்றும். கலையிலே வித்தை தோன்றும். வித்தையிலே அராகந் தோன்றும். ஆக இவ்வைந்துங் கூடித் தொழிற்படுமிடத்துப் புருடன் தோன்றும்.

உருத்திரதேவ ரருளினாலே முன்சொன்ன கலையிலே மூலப்பிரகிருதி தோன்றும். மூலப்பிரகிருதியிலே முக்குணங் களுந் தோன்றும். முக்குணங்களுந் தோன்றாமல் நின்ற இடம் அவ்வியத்தம். அந்த அவ்வியத்தத்திலே சித்தமும் புத்தியும் புத்தியில் ஆங்காரமுந் தோன்றும். அந்த ஆங்காரந்தான் தைசதவாங்காரம் வைகரியாங்காரம் பூதாதியாங் காரமென்று மூன்று விதமாயிருக்கும். தைசத வாங்காரத்திலே, சாத்துவிதகுணத்தினையுடைய மனமும் ஞானேந்திரியம் ஐந்தும் தோன்றும். வைகரியாங்காரத்திலே, ராசத குணத்தினையுடைய தன்மாத்திரைகளைந்துந் தோன்றும்; சத்தத்திலே ஆகாசமும், பரிசத்திலே வாயுவும், ரூபத்திலே தேயுவும், ரசத்திலே அப்புவும், கெந்தத்திலே பிருதிவியுமாகப் பூதங்களைந்துந் தோன்றும். பூதங்களாகிய பிருதிவியிலே மயிராதி ஐந்தும் இடைபிங்கலையாதியாக நாடிகள் பத்தும் ஆகப் பதினைந்தும் தோன்றும்; அப்புவிலே ஓடு நீராதி ஐந்தும், தேயுவிலே ஆகாரமாதி ஐந்தும் தோன்றும். வாயுவிலே ஓடல் முதலாகியஐந்தும் பிராணாதியாகிய வாயு பத்தும் ஆகப் பதினைந்தும் தோன்றும்; ஆகாசத்திலே காமாதி ஐந்தும் தோன்றும். கன்மேந்திரியத்திலே வசனாதிகளைந்துந் தோன்றும்.

ஆக இங்ஙனம் சுத்தமாயையிலே ஒன்பதும், அசுத்த மாயையிலே ஏழும், பிரகிருதி மாயையிலே எண்பதுமாகத் தொண்ணூற்றாறுந் தோற்ற மறிக.

ஒடுக்கம், உட்கருவி முப்பத்தாறும் தோன்றின முறைமையிலே ஒடுங்கும். புறக்கருவிகள் அறுபதும் தோன்றப் பட்டதெல்லாம் அழிந்துபோம்; மற்றது அதன் காரணத்திலே ஒடுங்கும்.

உட்கருவி ௩௬

ஆன்ம தந்துவம்

இந்தத் தத்துவந் தொண்ணூற்றாறுக்கும் வகையே தென்னில், பூதங்களாவன : பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் ஆக ௫ ; ஞானேந்திரியங்களான : சோத்திரம் தொக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணம் ஆக ௫ ; கன்மேந்திரி யங்களாவன : வாக்குப் பாதம் பாணி பாயுரு உபத்தம் ஆக ௫ ; தன்மாத்திரைகளாவன : சத்தப் பரிச ரூப ரச கெந்தம் ஆக ௫ ; அந்தக்கரணங்களாவன : மனம் புத்தி ஆங்காரம் சித்தம் ஆக ௪ ; ஆகத் தத்துவம் ௨௪. இவற்றிற்கு ஆன்ம தந்துவமென்றும் அசுத்த தத்துவமென்றும் போக்கியகாண்ட மென்றும் பெயர்.

வித்தியா தத்துவம்

வித்தியா தத்துவங்களாவன : காலம் நியதி கலை வித்தை அராகம் புருடன் மாயை ஆக ௭. இவற்றிற்கு வித்தியா தத்துவமென்றும் சுத்தாசுத்த தத்துவமென்றும் போக காண்டமென்றும் பெயர்.

சிவதந்துவம்

சிவதத்துவங்களாவன : சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்தி சிவம் ஆக ௫ ; இவற்றிற்குச் சிவதத்துவமென்றும் சுத்த தத்துவமென்றும் பிரேரக காண்டமென்றும் பெயர்.

ஆக உட்கருவி ௩௬.

புறக்கருவி ௬0

புறக்கருவிகளாவன : பிருதிவியின் கூறு மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை ஆக ரு. அப்புவின் கூறுவன : ஓடுநீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை ஆக ரு. தேயுவின் கூறுவன : ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பு ஆக ரு. வாயுவின் கூறுவன : ஓடல், இருத்தல், நடத்தல், கிடத்தல், நிற்றல் ஆக ரு. ஆகாசத்தின் கூறுவன ; காமம், குரோதம், லோபம், மோகம், மதம் ஆக ரு.

வாயுக்களாவன : பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் ஆக ௧0. வசனாதிகளாவன : வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் ஆக ரு. நாடிகளாவன : இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, [1]அலம்புருடன், சங்கினி, வயிரவன், குதன் ஆக ௧0. வாக்குக்களாவன : சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி ஆக ச. [2]குணங்களாவன : சாத்துவிகம், ராசதம், தாமதம் ஆக ௩. ஆங்காரமாவன : தைசதவாங்காரம், வைகரியாங்காரம், பூதாதியாங்காரம் ஆக ௩. ஆகப் புறக்கருவி ௬0.

ஆகத் தத்துவம் தொண்ணூற்றாறு.

உட்கருவியின் தொழில் : ஆன்மதத்துவங்களின் தொழில்

இதன் தொழிலாவன : பிருதிவிக்கு : வடிவு - நாற்கோணம் ; நிறம் - பொன்மை ; குணம் - உரத்துத் தரித்தல் ; [3]ஆயுதம் - வச்சிரம் ; அக்கரம் - லகாரம் ; கலை -

---

[1]அலம்புருடன் வயிரவன் குதன் என்பவற்றுக்குப் பதிலாக அலம்புடை, புருடன், குரு எனச் சொல்லுதலுமுண்டு.

[2]குணம் மூன்றினுக்கும் பதிலாக, அர்த்த எடணை, புத்திர எடணை, உலக எடணை என மூன்று எடணைக் கொள்ளுதலும் உண்டு.

[3]ஆயுதம் - குறி.

நிவிர்த்தி கலை ; தொழில் - சத்தாதி ரு ; தேவதை பிரமன்; ஆக அ.

அப்புவுக்கு : வடிவு - இரு கோணம் ; நிறம் - வெள்ளை ; குணம் - குளிர்ந்து பதஞ்செய்கை ; ஆயுதம் - கோகனகம் ; அக்கரம் - வகாரம் ; கலை - பிரதிட்டா கலை ; தொழில் - சத்தாதி ச ; தேவதை - விட்டுணு ; ஆக அ.

தேயுவுக்கு : வடிவு - முக்கோணம் ; நிறம் - சிவப்பு ; குணம் - சுட்டொன்றுவித்தல் ; ஆயுதம் - சுவத்திகம் ; அக்கரம் - மகாரம் ; கலை - வித்தியா கலை ; தொழில் - சத்தாதி ங ; தேவதை - உருத்திரன் ; ஆக அ.

வாயுவுக்கு : வடிவு - அறுகோணம் ; நிறம் - கறுப்பு ; குணம் - சலித்துத் திரட்டல் ; ஆயுதம் - அறுபுள்ளி ; அக்கரம் - யகாரம் ; கலை - சாந்திகலை ; தொழில் - சத்தாதி உ ; தேவதை - மயேசுரன் ; ஆக அ.

ஆகாசத்துக்கு : வடிவு - வட்டம் ; நிறம் - புகை ; குணம்- நிரந்தரமாய் இடங் கொடுத்தல் ; ஆயுதம் - அமுதவிந்து ; அக்கரம் - ஹகாரம் ; கலை - சாந்தியாதீதகலை ; தொழில் - சத்தம் க ; தேவதை - சதாசிவம் ; ஆக அ.

ஞானேந்திரியம் : சோத்திரம் ஆகாயத்தினிடமாக நின்று செவியைப் பொருந்திச் சத்தத்தை யறியும். தொக்கு வாயுவினிடமாக நின்று தேகத்தைப் பொருந்திப் பரிசத்தை யறியும். சட்சு தேயுவினிடமாக நின்று கண்ணைப் பொருந்தி ரூபத்தை யறியும். சிங்ஙுவை அப்புவினிடமாக நின்று நாவைப் பொருந்தி ரசத்தை யறியும். ஆக்கிராணம் பிருதிவியினிடமாக நின்று மூக்கைப் பொருந்திக் கந்தத்தை யறியும்.

கன்மேந்திரியம் : வாக்கு ஆகாசத்தினிடமாய் நின்று வாயைப் பொருந்தி வசனிக்கும். பாதம் வாயுவினிடமாக நின்று காலைப் பொருந்திக் கெமனிக்கும். பாணி தேயுவினிடமாக நின்று கையைப் பொருந்தி இடுதலு மேற்றலுஞ் செய்யும். பாயுரு அப்புவினிடமாக நின்று குதத்தைப் பொருந்தி

மலவிசர்க்கத்தைக் கழிப்பிக்கும். உபத்தம் பிருதிவியினிடமாக நின்று கோசத்தைப் பொருந்தி ஆனந்தத்தை விடும்.

தன்மாத்திரைகளைந்தும் சோத்திராதி ஐந்துக்கும் விடயமாக இருக்கும்.

மனம் பற்றும். புத்தி நிச்சயிக்கும். ஆங்காரம் கொண்டெழுப்பி, அகந்தைக்கு வித்தாய், யானெனதென்று விகற்பித்து வரும். சித்தம் சிந்திக்கும். ஆக ௪. இந்த அந்தக்கரணங் காரியப்படுகிறதெப்படி யென்னில், இவை நாலையுஞ் சேட்டிப்பிக்கும் உள்ளம் ௧. ஆக ௫.

இந்த அஞ்சையும், பிரும்மா அகாரத்தை எழுப்ப அகாரம் மனத்தை எழுப்பும்; விட்டுணு உகாரத்தை எழுப்ப உகாரம் புத்தியை எழுப்பும்; உருத்திரன் மகாரத்தை எழுப்ப மகாரம் ஆங்காரத்தை எழுப்பும்; மயேசுரன் விந்துவை எழுப்ப விந்து சித்தத்தை எழுப்பும்; சதாசிவம் நாதத்தை எழுப்ப நாதம் உள்ளத்தை எழுப்பும். இப்படி காரியப்படுமென வறிக.

### வித்தியாதத்துவங்களின் தொழில்

காலம், செல்காலமான எல்லையும், நிகழ்காலமான பலமும், எதிர்காலமான புதுமையும் என மூன்றும். நியதி ராசாக்கினைபோலக் கன்மபலத்தை நிச்சயித்து நிறுத்தும். கலை, கேவலத்தை நீக்கிக் கிரியையை எழுப்பும். வித்தை அறிவை யெழுப்பும். அராகம், ஆசையை எழுப்பிப் பெற்றதைச் சிறிதாக்கிப் பெருதகிலே இச்சை யுண்டாக்கும். புருடன் விடயத்திலே அழுத்துவிக்கும். மாயை, குணரூபமாய் நின்று, எண்பது குணங்களாலேயும் பேதிப்பித்து, பொய்யை மெய்யென மயக்கும். இந்த வித்தியா தத்துவமேழுங் கண்டுகொள்க.

### சிவதத்துவங்களின் தொழில்

சிவதத்துவங்கள் காரியப்படும் முறைமை எப்படியென்னில், சுத்தவித்தை ஞானமேறிக் கிரியை குறைந்திருக்கும். ஈசுரம் கிரியையேறி ஞானங் குறைந்திக்கும். சாதாக்கியம் ஞான

மும் கிரியையும் ஒத்திருக்கும். சத்தி கிரியையாயிருக்கும். சிவம் ஞானமாயிருக்கும். இந்த சுத்தததத்துவங் காரியப்படுகிற தெப்படி யென்னில், இச்சாசத்தி ஈசுரத்தை யெழுப்பும்; ஞானசத்தி சுத்த வித்தையையுஞ் சிவத்தையு மெழுப்பும்; கிரியாசத்தி சாதாக்கியத்தையுஞ் சத்தியையும் எழுப்பும். இப்படி அறியப்படுமென வறிக.

சிவதத்துவஞ் சிவனுக்கிடம், நாதமென்றும் பெயர். சத்தி தத்துவங் காருண்ணியத்துக்கிடம், விந்துவென்றும் பெயர்; சாதாக்கிய தத்துவம் அனுக்கிரகத்துக்கிடம், சதாசிவ மென்றும் பெயர்; ஈசுரதத்துவம் திரோதானத்துக்கிடம், மயேசுர மென்றும் பெயர்; சுத்தவித்தை சங்காரம் திதி சிருஷ்டிக் கிடம், உருத்திர மென்றும் பெயர். ஆகத் தத்துவமைந்தும், ஒன்பது மூர்த்திக்கும் பஞ்ச கிருத்தியத்துக்கும் இடமென வறிக.

ஆக உட்கருவி முப்பத்தாறின் தொழில் அறிக.

## புறக்கருவியின் தொழில்

### பூதகாரியம்

புறநிலைக் கருவியின் தொழிலாவன: மயிர் வளரும், எலும்பு உரக்கும், தோல் வறகென்னும், நரம்பு கதித் தோடும், தசை முற்றும்; ஓடுநீர் விழும், உதிரம் பரக்கும், சுக்கிலம் வர்த்திக்கும், மூளை மெத்தென்றிருக்கும், மச்சை நிறைக்கும்; பசி தாகிக்கும், நித்திரை மயக்கும், பயம் அஞ்சுவிக்கும், மைதுனம் செலுத்தும், சோம்பு முறிப்பிக்கும்; ஓடல் விரைவிக்கும், நடத்தல் எழுப்பும், நிற்றல் நிற்பிக்கும், இருத்தல் இருப்பிக்கும், கிடத்தல் கிடப்பிக்கும்; காமம் இச்சிப்பிக்கும், மதம் அகங்கரிப்பிக்கும், லோபம் பிசினிப்பிக்கும், மோகம் மயக்கும், கு[illegible]க்கும்.

ஆகப் பூதகாரியம் உரு.

## மற்றக் கருவிகள்

பிராணன் மூலாதாரத்திலே தோன்றி, இடை பிங்கலையா லேறி, கபாலத்தளவுஞ் சென்று, நாசியினிடமாய்ப் பன்னிரண்டங்குலம் வெளிப்புறப்பட்டு, நாலங்குலம் வெளியே சென்று, எட்டங்குலம் உள்ளே யடங்கும். அபா னன் மலசல விசர்க்கங்களைக் கழிப்பிக்கும். உதானன் வைகரி வாக்கைப் பொருந்தி அக்கரங்களை வசனிக்கும். வியானன் உண்ட அன்னசாரத்தை எழுபத்திராயிரம் நாடிகளினுங் கலப்பிக்கும். சமானன் எல்லாவற்றையுஞ் சமானம் பண் ணும். நாகன் தும்மல் இருமல் விக்கலை யுண்டாக்கும். கூர் மன் கண்ணேற்றல் செய்யும். கிரிகரன் சோம்பு கொட்டாவி களை யுண்டாக்கும். தேவதத்தன் இமைப்பிக்கும், நகைப்பிக் கும். தனஞ்சயன் உடம்பை வீங்கவும் விரியவுஞ் செய்து, உயிர் நீங்குங் காலத்துக் கபாலத்தை வெடித்துப்போம். ஆக வாயு ௧0.

வசனாதிகளைந்தும் வாக்காதிகளுக்கு விடயமாயிருக்கும்.

இடை இடது மூக்கிலே நிற்கும். பிங்கலை வலது மூக்கிலே நிற்கும். சுழுமுனை நேரே நிற்கும். காந்தாரி கண்ணிலே நிற் கும். அத்தி உடலெங்கும் நிற்கும். சிங்குவை தாலுவிலே நிற்கும். அலம்புருடன் செவியிலே நிற்கும். சங்கினி களத்திலே நிற்கும். வயிரவன் கோசத்திலே நிற்கும். குதன் குதத்திலே நிற்கும். ஆக நாடி ௧0.

சாத்துவிகம் : தபசு, க்ஷமை, கிருபை, சந்தோஷம், செவ்வ றிவு, அடக்கமுடைமை, பொறுமை இவை முதலாயின. இராசதம் : கொடுமை, சௌரியம், உற்சாகம், அபிமானம், கிருபையற்றிருக்கை, இடும்பை முதலாயின. தாமதம்: மந்தம், கோட்சொல்லுதல், கவுரவம், நித்திரை, மதம், மாச்சரியம், அறியாமை, சோம்பு முதலாயின.

(தொடரும்)

# சிவஞான சித்தியார் சுபக்கம் மூலமும் சிவாக்கிர யோகிகள் உரையும்

(மலர் - 14 - இதழ் - 10 - 512-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னும் இதனானும், "நினைப்பவர் மனம் கோயிலாக் கொள்பவன்" (அப்பர் தேவாரம், 5. 2. 1) என்பதனானும்,

தயாவிமுச்யதே தேஹம் பதிவிஜ்ஞாந நிர்மலா:|
பஞ்சஸம்ஹிதாத்மகே தேஹே ஶிவஸ்தத்ரைவ திஷ்டதி ||

என்பதனானும் கண்டுகொள்க. சரு

மேல் அப்பரமசிவன் அனந்தாதி மூர்த்திகளையும் பூமியில் ஆசாரிய மூர்த்திகளையும் தனது திருமேனியாக அதிஷ்டித்துக் கொண்டு நிற்பானேன் என்னின், வேதாகமங்களை அனுக்கிரகம் பண்ணி, குரு சிஷ்ய சம்பிரதாயப் பிரவிர்த்தியைப் பண்ணுவித்துத் [1]தத்துவாரா போக மோக்ஷங்களைக் கொடுப்பதற்காக என்பது கூறுகின்றது.

ஆரணம் ஆக மங்கள் அருளினால் உருவு கொண்டு
காரணன் அருளா னாகில் கதிப்பவ ரில்லை யாகும்
நாரணன் முதலா யுள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாம்
சீரணி குருசந் தானச் செய்தியும் சென்றி டாவே. 66

(உரை) அன்வயம். காரணன் அருளினால் உருவுகொண்டு ஆரணம் ஆகமங்கள் நாரணன் முதலாயுள்ள சுரர் நரர் நாகர்க்கெல்லாம் அருளானாகில் கதிப்பவர் இல்லையாகும் சீரணி குருசந்தானச் செய்தியும் சென்றிடாவே - பரமகாரணராகிய சிவன், கிருபையினால் அனந்தேசுவர ஸ்ரீகண்டேசுவரராதி மூர்த்திகளைத் திருமேனியாகக் கொண்டு, நாராயணாதி தேவர்களுக்கும் சனற்குமராதி தேவருஷிகளுக்கும் வசிஷ்டாதி மனுஷ்யருஷிகளுக்கும் சேஷன் முதலிய சர்ப்ப ராஜாக்களுக்கும் வேதாகமங்களை உபதேசியாதிருக்கில், சொல்வாரும் அறிவாருமின்றி, குருசிஷ்ய சம்பிரதாயப் பிரவர்த்தியுமின்றித் தருமார்த்தகாமமோக்ஷமென்னும் சதுர்விதப் புருஷார்த்தங்களையும் அடைவாரற்றுப்போம்[2]. சசு

[1] தத்துவாரா - அதன் வழியாக. [2] திருக்களிற்றுப்படியார், 5 காண்க.

மேல் கர்த்தாவானவனுக்கு ரூபாதிகளில்லை என்னில் நினைக்கவும் போகாதாமாகையால், அவனை வழிபட்டுப் பிழைப்ப தெவ்வாறெனின், உத்தரம் :

உருவருள் குணங்க ளோடும் உணர்வருள் உருவிற் றோன்றும்
கருமமும் அருள ரன்றன் கரசர ணாதி சாங்கம்
தருமரு ளுபாங்க மெல்லாம் தானருள் தனக்கொன் றின்றி
அருளுரு உயிருக் கென்றே ஆக்குவன் அசிந்த னன்றே. 67

(உரை) உரு அருள் உணர்வு - சிவனுடைய அங்கமும் ஆன்மாக்களின் அனுக்கிரகார்த்தமாகச் சிற்சத்தி சொரூபமானதே; கரசரணாதி அருள் - கரசரணாதியான பிரத்தியங்கமும் கிருபையினாலான ஞான சொரூபமே ; குணங்களோடு சாங்கம் உணர்வு அருள் - தேசகுண சொரூபமான சாங்கமும் கிருபையாலுண்டான ஞானசொரூபமே ; உபாங்கமெல்லாம் தானருள் உணர்வு - உபாங்கமானவைகள் தாமும் அருளினாலுண்டான ஞானசொரூபமே ; உருவில் தோன்றும் கருமமும் அருள் - இத்திருமேனியில் தேவர்கள் முதலானவரைத் தோற்றுவிப்பதும் கிருபையினாலேயே ; தனக்கொன்றின்றி அருளுரு உயிருக்கென்றே ஆக்குவன் அசிந்தன் அன்றே - இங்ஙனமான திருமேனிக்கு மாயோபாதியு மில்லாமல் தனக்கொரு பிரயோசனமுமில்லாமல், ஆன்மாக்களின் போக மோக்ஷார்த்தமாகப் பண்ணும் தியான பூசையின் பொருட்டுக் கிருபையினாலுண்டாகிய பாவனாரூப சைதன்யவிக்கிரகத்தையுடையவனாகையினால், சிந்திக்கப்படாதவன்.

[1]அங்கமாவன, சிரசும் முகமும் இருதயமுமாம்.

[2]பிரத்தியங்கமாவன, வக்ஷசும் கண்டமும் ஸ்தனங்களும் தோள்களும் நாபியும் உதரமும் குஹ்யமும் நேத்திரமும் நாசியும் சுரோத்திரங்களும் மஸ்தகங்களும் பாதங்களும் அங்குலிகளு மூருக்களும் முழந்தாள்களும் கணைக்கால்களுமாம்.

---

[1] அங்கம் - திருமேனி. [2]பிரத்தியங்கம் - அத்திருமேனியிலுள்ள உறுப்புக்கள்.

[1]சாங்கமாவது, குணமூர்த்திகளான பத்தும்; அவையாவன, ஆரிணியாதி குணத்திரயம்-திரிசூலம்; சத்தியம் - பரசு; பிரதாபம் - கட்கம்; துரபேத்தியம் - வச்சிரம்; அநுக்கிரகம் - அபயமுத்திரை; ருத்தியாதி சுத்தமாயை - நாகம்; அதோமாயை - பாசம்; விவர்ணம்- அங்குசம்; சுத்தநாதம் - கண்டை; பாசசங்காரம் - அக்னி.

[2]உபாங்கமாவன, வஸ்திரம் உபவீதம் மாலை கந்தம் ஆபரணம் ஆசனம் ஆவரணம் இவ்வேழுமாம்.

தத் உக்தம் வாதுளே—

அங்கு ப்ரத்யங்கு ஸாங்குஞ்ச உபாங்குஞ் சதுரோஹவேத்।
ஶிரோ வக்த்ரஞ்ச ஹ்ருதயம் அங்குஞ் சேதி ப்ரகீர்திதம்॥

வக்ஷ꞉ கண்ட꞉ஸ்த நௌஹாஹூ நாபி கு⁴ஹ்யோ ஊரம்தயா꞉।
நேத்ரந் நாஸாஸ்ய கர்ணௌச பாணி பாதௌ தயாங்கு³லி꞉॥

ஊருச ஜாநு ஜங்வேச ப்ரத்யங்குஞ் சேதி கத்²யதே।
மூர்திநாம் கு³ணருபக்து ஸாங்குஞ் சேதி ப்ரகீர்திதம்॥

கு³ணச்ஹிந்நமிதிஜ்ஞேயம் தத்கு³ணந் ஒஶயாஹவேத்।
கு³ணம்ஸத்யம் ப்ரதாபஞ்சது³ர்ஹேதுாநு க்³ருஹம்ததா॥

---

[1]சாங்கம் - அங்கத்தோடு கூடியது. ஆரணி, செனனி, ரோத யித்திரி என்ற மூன்று சக்திகளையும் குறிப்பது திரிசூலம். ஆரிணி (ஹாரிணி) சங்காரத்தையும் அனுக்கிரகத்தையும் செய்யும் சத்தி; ஹ்ரு - அழித்தல். செனனி பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் சத்தி; ஜந் - பிறப்பித்தல். ரோதயித்திரி திதியும் திரோதானமும் செய்யும் சத்தி; ருத் - மறைத்தல். (79-ம் திருவிருத்த உரை பார்க்க.) பரசு - மழு. கட்கம் - வாள். துரபேத்தியம் - பிறிதொன்றால் பேதிக்கப் படாத இயல்பு. விவர்ணம் - வர்ணமின்மை. கண்டை - கண்டா மணி. [2]உபாங்கம் - அங்கத்தைவிட்டு நீங்காது அதன் சமீபத்தி லிருப்பது. ஆசனம் - புலித்தோல் முதலியன. ஆவரணம் - சட்டி.

ருஜிமாயா விவர்ணஞ்ச நாஜம் ஸம்ஹ்ருதிரேவச।
ஏதேஷ பஞ்சகுணா: ப்ரோக்தார தேஷாம் லக்ஷணமுச்யதே॥

த்ரிகுணம் சூலமித்யுக்தம் ஸத்யம் பரசுரிஷ்யதே।
வஹ்நீச ப்ரதாபோயம் துர்ஹேது: வஜ்ரமிஷ்யதே॥

ஈசஸ்யா நந் ருஹஞ்சைவ அஹயஞ்ச ப்ரசஸ்யதே।
ருஜிஸ் ஸ்யாந்நாகரூபந்து பாசம் மாயாஸ்வரூபகம்॥

விவர்ணம் அங்குசம்சைவ கண்டா நாதாத்மகம் விது:।
ஸம்ஹாரம் அக்நிரூபம் ஸ்யாத் பாசாநாம்ஸஸ்மஸாத்க்ருதி: ॥

ஏதேவை குணரூபாஸ்ச ஸாங்கம்சேதி ப்ரகீர்திதா:।
வஸ்த்ரோப வீதமாலாஸ்ச கந்த மாஹரணம்ததா ॥

ஆஸநாவரணஞ்சைவ உபாங்கஞ்சேதி கீர்திதம்। —இதி.

இவ்வாறு கிருபையினைக் கொண்ட சதாசிவரிடத்திலுண்டான மகேஸ்வரனுடைய திருமேனியில் இருதயத்தினின்று சகச்ராம்சமாக ருத்திரதேவர் தோன்றுவர். கொடியம்சமாக வாமதக்ஷிண பார்ஸ்வங்களில் விஷ்ணுவும் பிரம்மாவுந் தோன்றுவார்கள். தக்ஷிண வாம லலாடநேத்திரங்களில் சூரிய சோமாக்னி தேவர்கள் தோன்றுவார்கள். பிராணனில் வாயுபகவான் தோன்றுவன். சுரோத்திரியங்களில் மந்திராதி சர்வரக்ஷகமான கீலகந் தோன்றும். முகத்தில் வேதாதி சர்வசாத்திர ரூபமான அபரஞானந் தோன்றும். கண்டத்தில் கணேசுவரர் தோன்றுவர். இருதயத்தில் சுப்பிரமணியர் தோன்றுவர். நாபியில் இந்திர யமவருண குபேரர் தோன்றுவார்கள். பிரத்தியங்கத்திற் பஞ்சாசத்கோடி தேவர்களுந் தோன்றுவர். உரோம கூபங்களிற் கோடிருஷிகள் தோன்றுவார்கள்.

முப்பத்து முக்கோடி தேவர்களென்றும் நாற்பத்தெண்ணாயிரமிருடிகளென்றும் மிகவுங் கேட்கப்பட்டிருக்கையில், அதிக [1]சங்கை

---

[1]சங்கை - எண்ணிக்கை.

யாகச் சொல்லுவானென்னை யெனின், அதிக சங்கையெல்லாம் கண்டத்திற்குப் புறம்பென்றறிக.

சூரிய சோமேந்திராதி தேவர்களுக்குக் காச்யப அத்திரியர்திகளிடத்தில் உற்பத்தியென்றிருக்க, மகேசுவரனிடத்தில் உற்பத்தியென்றது என்னையோ எனின், காச்யபாதியுற்பன்ன சூரியாதி தேவர்கள் ஈசுவராங்கோற்பன்ன தேவர்களுக்கு அதிஷ்டேயஸ்தான மெனவறிக.

ஈசுவராங்கோற்பன்னரான தேவர்கள் சுத்தாத்துவ வாசிகளாயிருந்து அசுத்தாத்துவ வாசிகளாயிருக்கிற இத்தேவர்களை அதிஷ்டித்துக்கொண்டிருப்பார்கள்.

இப்படி இவ்வீசுவரனிடத்தில் உருத்திராதி சகல தேவர்களும் உண்டானாற்போல, ஈசுவரியாளிடத்தினும், உமாதி சமஸ்த தேவதாஸ்திரீகளும் கோடிசத்திகளும் உண்டாம் என அறிவாயாக.

தத் உக்தம் தத்ரைவ—

கர்மேஶஸ்ய ஸஹஸ்ராம்ஶாத் மஹேஶஸ்ய ஸமுத்பவ:|
மஹேஶஸ்ய ஸஹஸ்ராம்ஶாத் ருத்ரஶ்சைவ ஸமுத்பவ:||

ஏதம்மஹேஶ கோட்யம்ஶாத் ஶ்ரீரும்ஹவிஷ்ணு ஸமுத்பவ:|
தக்ஷிணாங்க ஹவோப்ரம்ஹா ஹரிர்வாமாங்க ஸம்பவ:||

ஹ்ருதயாந் நீலருத்ரஸ்து ஶிவஸ்ய ஶிவஸம்ஜ்ஞக:|
நேத்ரேஷு ஸவ்யவாமோர்த்வே ஸூர்யஸோமாக்நி ஸம்பவ:

ப்ராணவாயுஸ் ஸமுத்பந்ந ஶ்ரோத்ரே கீலாதி ஸம்பவ:|
ஆஸ்யேஜ்ஞாநம் ஸமுத்பந்நம் ஶ்ரேணஶஸ் த்ரிகுணோத்பவ:||

ஷண்முகோ ஹ்ருதயே ஜாதோ நாபௌ தேவாஸ் ஸமுத்பவா:|
பஞ்சாஶத்கோடி தேவாஶ்ச மஹேஶாங்க ஸமுத்பவா:||

ருஷயஸ்சதயா கோட்யோ ரோமகூபாத் ஸமுத்பவா: ।
மநோர்மந்யாஸ் ஸஹஸ்ராம்ஸாத் கௌரீஜாத மிதிஸ்ம்ருதம் ॥

ஸ்ரீஸ்ஸா ஸரஸ்வதீ தூர்கா உமாசைவ ப்ரஹ்லாதயா ।
ஸசீஜ்யேஷ்டாச லக்ஷ்மீச தயைவாந் யாஸ்ச ஸக்த்ய: ॥

ஏதாவை கோடிஸக்திஸ்ச கௌரீ தேஹ ஸமுத்பவா ॥ ௬௭

மேல் விசுவமூர்த்தியும் அந்தர்யாமியும் விசுவ காரணனும் விசுவாதீதனுமாய் நிற்பனென்பது உணர்த்துகின்றது.

உலகினை யிறந்து நின்ற தானுரு என்ப தோரார்
உலகவன் உருவிற் றோன்றி ஒடுங்கிடும் என்றும் ஓரார்
உலகினுக் குயிரு மாகி உலகுமாய் நின்ற தோரார்
உலகினில் ஒருவன் என்பர் உருவினை உணரார் எல்லாம்.68

(உரை) அன்வயம் : [1]உலகுமாய் நின்றது ஓரார், உலகு அவன் உருவில் தோன்றி ஒடுங்கிடும் என்றும் ஓரார், உலகினுக்கு உயிருமாகி நின்றது ஓரார், உலகினில் ஒருவன் என்பர் உருவினை உணரார் எல்லாம் - சிவனுடைய திருமேனியான சிற்சத்தி அபின்னை நிமித்தோபாதானதையினாலே விசுவாத்மகமாக நின்றதையும், சிவனுடைய திருமேனியாகிய சிற்சத்தி மாயையைப் பதிந்தபொழுது பிரபஞ்சந் தோன்றி சத்தி பராமுகையான பொழுது பிரபஞ்சம் ஒடுங்குமென்பதையும், பிரபஞ்சானுப்பிரவிஷ்டையினாலே பிரபஞ்சத்துக்கு நியந்தாவாகிய உயிராய் நின்றதையும் அசங்கோதர சிந்தையினாலே விசுவாதீதனாக நின்றதையும் அறியார்கள், சிவனுடைய சொரூபமாகிய அகண்டாகார சச்சிதானந்தத்தையை அறியாதபேர், உலகத்தில் பிரமாதி தேவர்களைப்போலே ஒருவன் என்பார்கள்.

தத் உக்தம் பூஜாஸ்தவே—

விஸ்வாத்மகம் ஸகஸகம்த மநந்தமீஸம்
விஸ்வேஸ்வரம் பரமகாரணம் அப்ரமேயம்॥

---

[1]முறையே விசுவாதிகன், விசுவகாரணன், விசுவாந்தர்யாமி, விசுவரூபி.

விஸ்வாரூபம் பரமகாரணகார்ய ஹீநம்
நித்யம் நிரஸ்தவிஷயை: பரமார்த்யஊர்த்வ்ஹீ:||

விஜ்ஞேயமவ்யயம் அசிந்த்யம் ஹாவநீய
மும்மங்யதீத நிலயம் ஸிவம்—இதிச|| சஅ

மேல் இதுவுமது.

தேவரில் ஒருவன் என்பார் திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்ற தோராசர் முதலுருப் பாதி மாதர்
ஆவதும் உணரார் ஆதி அரிஅயற் கறிய ஒண்ணு
மேவரு நிலையும் ஓரார் அதனுரு விளைவும் ஓரார். 69

(உரை) திருவுருச் சிவனைத் தேவர் தேவரில் ஒருவன் என்பார் - ஞானசொரூபியான சிவனை பிரம விஷ்ணு ருத்திரர் என்னும் மூர்த்திகளுக்குள்ளே ஒருவன் என்பர்; தேவர் மூவராய் நின்றது ஓரார் - சத்தியோ முக்த ப்ரவிருத்தர் என்னும் லய போக அதிகார ஸ்தானங்களிலே சிவன் சதாசிவன் மகேசுவரன் என்கின்ற மூன்று சொரூபத்தையும் அறியாத பேர்; முதல் உருப்பாதி மாதர் ஆவதும் உணரார் - சிருஷ்டியாதியிலே சத்தி சிவாத்மகமாக இந்திர தனுசுப் போல நீலமும் பொன்மையுமாய் நின்றதும் அறியார்; ஆதி அரி அயற்கு அறிய ஒண்ணு மேவரு நிலையும் ஓரார் - சகளத்துக் காதியான அமூர்த்தி சாதாக்கியம் அனல் ஸ்தம்பமாய் பிரம விஷ்ணுக் களுக்கும் அடிமுடி காண்பரிதாய் நின்றதும் அறியார்; அதன் உரு விளைவும் ஓரார் - அந்த மூர்த்தி சாதாக்கியத்திலே சகலப் பிரபஞ்சமும் உண்டாகிறதும் ஒடுங்குகிறதும் அறியார்.

தத் உக்தம் வாதுளே—

ஸௌவீர்யம் நாஸ்தி தத்தேஹே மாம்ஸாஸ்யி ருயிரந்நச |
இந்த்ர சாபம் இவாகாஸே தர்பணே ப்ரதிபிம்பவத் ||

அமூர்தத்வாத் கலாஹீநம் தத்ரூபம் லிங்ரவத் ஹவேத் |
ஸூர்யகோடி ப்ரதீகாஸம் ஜ்யோதிஸ்தம்ஹாக்ருதி ஸ்யிதம் ||

தஸ்யாஹ் யந்தர் முதாமூர்தீ ரமூர்தாஜி ரிஹோச்யதே।—இதி ।
ஏதச்சை திவ்யலிங்கம் து மூலஸ்தம்ஹம் இஹோச்யதே ॥

லிங்கே ஸர்வம் ஸமுத்பந்நம் லயஸ்தத்ரேவ சோச்யதே।
ஸ்ருஷ்டிஸ் ஸம்ஹார ஏவோக்தம் லிங்காநாமஸ்வசோச்யதே॥

மேல் இவ்வாறு நிர்க்குணத்தைப் பிரதிபாதித்து சகலருக்கு உபாஸ்யா மூர்த்தியாய் பிரவிருத்தகர் பேதமாய கலாமஸ்தகத்திலே யிருந்து பிரகிருதிமண்டல கிருத்தியங்களைப் பண்ணும் ஸ்ரீகண்ட பரமேசுவரனை பிரம விஷ்ணு வாதிகள் அபேக்ஷையாகப் பரமென்று கூறுகின்றது.

**போ**கியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியாய் யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரார்
வேகியா னுற்போற் செய்த [1]விளைவினை வீட்டல் ஓரார்
ஊகியா மூடர் எல்லாம் உம்பரில் ஒருவன் என்பர். 70

(உரை) போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார் - உமாமகேசுவர மூர்த்தமாயிருந்து உலகத்தில் ஆன்மாக்களுக் கெல்லாம் ஸ்திரீபுருஷ சம்போக மோகத்தை உண்டாக்குவது நிமித்தமென்றும்; யோகியாய் யோகமுத்தி உதவுதல் அதுவும் ஓரார் - கடுக்கை வனத்தில் யோகாசனத்திலே யிருந்து யோகிகளுக்கெல்லாம் யோக சாமர்த்திய முண்டாகித் [2]தத்பலமாகிய மோக்ஷத்தைக் கொடுப்பதற் கென்றும்; வேகியானுற்போல் செய்த விளைவினை வீட்டல் ஓரார் - கோபத்தை யுடையவர்களைப் போலே ஆன்மாக்களைத் தண்டிக்குமது அவர்கள் பண்ணின பாவம் மேன் மேலும் வளராமல் ஒழிக்கிறதென்றும்; ஊகியா மூடர் எல்லாம் உம்பரில் ஒருவன் என்பர் - விசாரியாத அஞ்ஞானிகளெல்லாம் இந்தச் சரித்திரங்களைக் கொண்டே தேவர்களில் ஒருவன் என்றே சொல்வார்கள்.[3] ௫0

---

[1] 'விளையினை' என்றும் பாடம். [2] தத்பலம் - அதன் பலன். [3] போகி - உமாமகேசுவர மூர்த்தம்; யோகி - தக்ஷிணாமூர்த்தி; வேகி - காமாரி.

மேல் இதுவும் அதற்கே புறனடை.

ஒன்றொடொன் றொவ்வா வேடம் ஒருவனே தரித்துக்கொண்டு
நின்றலால் உலகு நீங்கி நின்றனன் என்றும் ஓரார்
அன்றிஅவ் வேடம் எல்லாம் அருள்புரி தொழிலென் றோரார்
கொன்றது வினையைக் கொன்று நின்றஅக் குணமென் றோரார்.

(உரை) ஒன்றொடொன்று...நின்றனன் என்றும் ஓரார் - பிரம விஷ்ணு ருத்திரன் என்னும் மூன்று விக்கிரகங்களும் ஒன்றோடொன்று ஒவ்வாததாய் ஒருவனே ஏக காலத்தில் தரித்துக்கொண்டு நிற்கையால், காமக்குரோதாதிகளுக்குக் காரணமாகிய மாயாப் பிரபஞ்சத்திற்கு அன்னியமாக நின்றதையும்; அன்றி அவ்வேடம்... தொழில் என்று ஓரார் - அன்றி அந்த விக்கிரகங்களெல்லாம் கிருபையினாலே பண்ணப்பட்ட கிருத்தியங்களுக்கென்றும் விசாரியார். கிருபையினாலே பண்ணுகிற கிருத்தியத்திற்குச் சங்கரிப்பானேன் என்னில்; கொன்றது...குணம் என்று ஓரார் - அந்தச் சங்கார குணமானது ஆன்மாக்கள் பண்ணின கன்மத்தையே நசிப்பித்ததென்று விசாரியார். ௭௧

மேல் பிரபஞ்சத்தில் பிரகாச மெல்லாம் சிவனுடைய நேத்திரங்களின் பிரகாசம் என்பது உணர்த்துகின்றது.

நாயகன் கண்[1]நயப்பால் நாயகி புதைப்ப எங்கும்
[2]பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே சுடரொளி கொடுத்த பண்பிற்
றேயமார் ஒளிகள் எல்லாம் சிவனுருத் தேசதென்னார். 72

(உரை) சர்வலோக நாயகனாகிய பரமேசுவரனுடைய திருநயனங்களிலே லோக நாயகியாகிய பார்வதியார் விநோதத்தினாலே மூட, எல்லா லோகங்களும் அந்தகார மாகையினாலே, லோகங்களுக்குக் கிருபையினாலே நெற்றித் திருநயனத்தினாலே பிரகாசத்தைக் கொடுத்த பரிசினாலே, லோகங்களிலுண்டான பிரகாசமெல்லாம் சிவனுடைய திருநயனங்களின் பிரகாசம் என்று அறிவாயாக. ௭௨

[1]நயப்பு - திருவுள மகிழ்ச்சி. [2]பாய் இருள் - இருள் பரந்து.

மேல் கர்த்தாவினுடைய யோக போக ரூபங்கள் ஆன்மாக்களின் பொருட்டல்லது தனக்கில்லை என்றுணர்த்துகின்றது.

கண்ணுதல் யோகி ருப்பக் காமன்நின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை ஓரார் மால்தான்
எண்ணிவேள் மகனை ஏவ எரிவிழித் திமவான் பெற்ற [ரார்.
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப் பேரின்பம் அளித்ததோ

(உரை) கண்ணுதல்...மெலிந்தமை ஓரார் - நெற்றியிலே நயனத்தையுடைய பரமேசுவரன் சகிதேவியாரை நீங்கி யோகத்திலிருக்கவே, ஸ்திரீ புருஷர்களை விகாரமுண்டாக்கிக் கூட்டுங் காமன் உண்டாயிருக்கவும் தேவர்கள் முதலான பேர்கள் ஸ்திரீபோகமில்லாமல் துக்கிதரானதையும் விசாரியார்; மால்தான் எண்ணிவேள்...அளித்தது ஓரார் - திருமால்தான், பரமேசுவரன் யோகாசனத்திலிருக்கையினாலே எல்லோருக்கும் போகம் இல்லையாயிற்று, அந்த யோகத்தை விலக்கென்று வேளாகிய தம்முடைய பிள்ளையை அனுப்ப, அவன் போய்ப் புஷ்ப பாணத்தைத் தொடுப்ப, அவ்வளவில் பரமேசுவரன் நெற்றி அனல் விழியாலே எரித்து, பின்பு இமவான் மகளாகிய பார்வதியார் தபசு பண்ண அத்தபசினாலே சந்தோஷித்துத் திருக்கல்யாணம் பண்ணிக் கூடி ஆன்மாக்களுக்கு அமைவு பெறாத விஷய சுகத்தைக் கொடுத்ததை விசாரியார். ௫௩

மேல் ஸ்ரீகண்ட பரமேசுவரன் திருமேனியைச் சிவன் அதிட்டித்து நில்லாத பொழுது பிரகிருதியில் சிருஷ்டியாதி கிருத்தியம் கூடாதென்பது உணர்த்துகின்றது.

படைப்பாதித் தொழிலும் பத்தர்க் கருளும்பா வனையும்நூலும்
இடப்பாக மாத ராளோ டியைந்துயிர்க் கின்பம் என்றும்
அடைப்பானும் அதுவும் முத்தி அளித்திடும் யோகும் பாசம்
அடைப்பானும்தொழிலும்மேனிதொடக்கானேல்சொல்லொணாதே.

(உரை) படைப்பாதி...அதுவும் - சிருஷ்டியாதி கிருத்தியங்களைப் பண்ணுவது பக்த ஜனங்கள் தியான பூசைக்கும் வேதாகமங்களை அருளுவதும் இடது பாகத்தில் ஈசுவரியாருடனே கூடியிருந்து, ஆன்மாக்களுக்கு எப்பொழுதும் விஷய சுகத்தைச்

சேர்க்கிறதும்; முத்தி...சொல்லொணுதே - பக்தி முத்தியைக் கொடுக்கும் யோகமும் அஞ்ஞானத்தை யொழிக்கும் அனுக்கிரகமாகிய கிருத்தியமும், இவையெல்லாம் ஸ்ரீகண்ட பரமேசுவரன் திருமேனியை அதிஷ்டியாதபொழுது ஆமென்று சொல்லொணுது.

மேல் மூன்று ரூபமும் அனுக்கிரகார்த்தமென்று உணர்த்துகின்றது.

உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும் உருவி றந்த
அருமேனி அதுவுங் கண்டோம் அருவுரு ஆன போது
திருமேனி யுபயம் பெற்ருேம் செப்பிய மூன்றும் நந்தம்
கருமேனி கழிக்க வந்த கருணையின் விளைவு காணே. 75

(உரை) உருமேனி...கண்டோம் - கர்த்தா ரூபத்தைத் தரித்துக் கொண்டான் என்கையில், உருவில்லாமல் அருவம் என்பதறிந்தோம்; அருவுரு...பெற்ருேம் - கண்ணுடி நிழல்போலக் காணவுண்டாய், தீண்டுதற்கு இல்லையாயிருக்கும் ரூபா ரூபமானபோது, இருதன்மையாயிருக்கும் திருமேனியைக்கண்டோம்; செப்பிய மூன்றும்...வடிவுகாணே - சொல்லப்பட்ட அரூபம் ரூபம் ரூபா ரூபம் என்னும் மூன்று திருமேனியும் நம்முடைய கன்மகாரணமாய் வரும் தேகங்களை மாற்றவந்த கிருபாசத்தியின் வடிவென் றறிவாயாக.

'நந்தம்' என்றது சகலரைச் சொன்னது. ஆகில், ஒரு மூர்த்தியாக அனுக்கிரகம் பண்ணுவர் என்னுமல் மூன்று மூர்த்திகளினுலே அனுக்கிரகம் பண்ணுவரென்று சொல்வது கல்பனு கௌரவம் என்னில், அதல்ல; சக்ஷுராதி தீக்ஷை பண்ணுவதற்காக குருமூர்த்தியாயும், தியான பூஜார்த்தமாக சகளாகளமாயும், அந்தர்யாமியாயிருந்து அஞ்ஞானத்தை ஹரிப்பதற்காக அரூபமாயும் சொல்லவேண்டும். ௫௫

மேல் சிவன் ஷடத்வமூர்த்தியென்று வேதங்களிலே சொல்ல, இவ்விடத்து சித்ரூபன் என்று சொல்லுவானேன் என்பதற்கு உத்தரம்

அத்துவா மூர்த்தி யாக அறைகுவ தென்னை என்னில்
நித்தனுய் நிறைந்த வற்றின் நீங்கிடா நிலைமை யானும்

சித்துடன் அசித்துக் கெல்லாம் சேட்டித னுத லானும்
வைத்ததாம் அத்து வாவும் வடிவென மறைக ளெல்லாம்.

(உரை) அத்துவா மூர்த்தியாக அறைகுவது என்னை என்னில்-மந்திரம் பதம் வர்ணம் புவனம் தத்துவம் கலை என்கிற ஆறு அத்துவாவும் [1]கர்த்தாவுக்குத் தேகமென்று வேதங்கள் சொல்ல, நீ சிற்சத்தியே மூர்த்தியென்று சொன்னதென்ன என்னில்; நித்தனாய் நிறைந்தவற்றின் நீங்கிடா நிலைமையானும் - கர்த்தாவானவன் நித்தனுமாய்ப் பரிபூர்ணனுமாய் அந்த அத்துவாக்களைப் பிரியாத நிலையுடையவனாகையாலும்; சித்துடன் அசித்துக்கெல்லாம் சேட்டிதனுதலானும்-சித்தாகிய ஆன்மாக்களுக்கும் அசித்தாகிய மாயாகாரியங்களுக்கும் பிரேரகனாகையாலும்; வைத்ததாம் அத்துவாவும் வடிவென மறைகளெல்லாம்-அத்துவாவும் கர்த்தாவுக்குத் தேகமென்ன வேதாகமங்கள் ஸ்தாபித்தன. ௫௬

மேல் மந்திர ரூபம் உணர்த்துகின்றது :

மந்திர மத்து வாவின் மிகுத்ததோர் வடிவ மாகத்
தந்ததென் அரனுக் கென்னில் சகத்தினுக் குபாதா னங்கள்
விந்துமோ கினிமான் மூன்றும் இவற்றின்மே லாகி விந்துச்
சிந்தையா ரதீத மான சிவசத்தி சேர்ந்து நிற்கும். 77

(உரை) மந்திரம் அத்துவாவின் மிகுத்ததோர் வடிவமாகத் தந்ததென் அரனுக் கென்னில்-அத்துவாக்களுக்குள்ளே மந்திராத்து

---

[1]அத்துவாக்கள் சதாசிவர்க்குத் திருமேனியான முறைமை:

" அவயவம் கலைக ளாகும் ஆதிய புவனம் ரோமம்
சுவையுறு துவக்கு வன்னம் சோரிமந் திரம தாகும்
தவமுறு பதம்ந ரம்பு தத்துவந் தாது வாகும்
சிவமுயர் சதாசி வர்க்குச் சிறந்தவா றுறுப்புந் தானே."

பஞ்ச கலைகளும் அங்கம்; அதாவது, சாந்தியாதீதகலை திருமுடி, சாந்திகலை திருமுகம், வித்தியாகலை மார்பு, பிரதிஷ்டாகலை குய்யம், நிவர்த்திகலை முழந்தாளும் பாதமும்; புவனங்கள் உரோமம்; வன்னங்கள் தோள்; மந்திரங்கள் சோரி; பதங்கள் நரம்பு; தத்துவங்கள் என்பும் தசையும்.

வாவே முக்கியமான மூர்த்தியாக அரனுக்குச் சொன்னதென்னை யெனில்; சகத்தினுக்குபாதானங்கள் விந்து மோகினி மான் மூன் றும் இவற்றின் மேலாகி விந்து சிந்தையாரதீதமான சிவசத்தி சேர்ந்து நிற்கும் - பிரபஞ்சத்துக்கு உபாதானமானது, விந்துவென் றும் மோகினி யென்றும் மானென்றும் மூன்றும். இந்த மூன் றுபாதானத்திற்குள்ளே உத்தமமான விந்துவிலே சிந்திக்கப்படாத பராசத்தி பொருந்தியிருக்கும்.

யாதாமொன்று ஜடமும் அனேகமுமாயுள்ளது, அஃதெல்லாம் காரியமும் அசத்துமென்னும் அனுமானத்தால் ஜடமாக, ஜகத் துபாதான காரணம் மூன்றென்று சொல்லுகையால், காரியமும் அசத்துமாம். இதனால் சைவம் சற்காரியவாத மென்பதற்கு விரோதமென்னில், மேயமகாமாயை யென்பதொன்றே முதற்கார ணம். அந்த மகாமாயை சத்ரூபையசத்தி க்ஷோபத்தம் பண்ண, அந்த க்ஷோபதப் பிரதேசம் பிரகாசகம் என்றும், மோஹகம் என்றும், ஆஞ்ஞகம் என்றும் திரிவிதமாம். அதற்கே பரியாயமாக சுத்தமென் றும் சுத்தாசுத்த மென்றும் அசுத்தமென்றும், பிந்து வென்றும் மோகினியென்றும் மானென்றும் இத்தியாதி நாமங்களுண்டு. இந்த உபாதானங்களுக்குள்ளே விந்துவிலே நின்றும் உண்டான சுத்தாத் துவா பிரபஞ்சத்துக்கு சாந்தாத்மக மென்றும், மோகினியிலே யுண்டான மிச்ராத்துவா பிரபஞ்சத்துக்குக் கோராத்மக மென்றும், மானிலே யுண்டான அசுத்தாத்துவா பிரபஞ்சத்துக்கு மூடாத்மக மென்றும் பெயராம். பரமோபாதான காரணம் குண்டலினி மகா மாயாதி நாமத்தை யுடையதொன்றே. அபரவிந்து மோகினி மான் என்னுமிம் மூன்றும் மூலோபாதானமான குண்டலியிலே நின்று முண்டான குணாத்மகங்கள். இக்கருத்தே "விந்துவின்மாயையாகி மாயையின் அவ்வியத்தம், வந்திடும்" (சித்தி. 39) என்றதும்.

குண்டலினி மூலோபாதானம் என்பதற்குச் சம்மதி :

பௌஷ்கரே—

ஸாசகுண்டலிநீ ஶம்ஹோ ஶக்திரூபா ஜடாத்மிகா ।
உபாதாநத்வதோஹேதோ குலாலே மூர்திகாயதா ॥

குணத்திரயம் உண்டான விசுவம் மூன்று விதமாயிருக்கும் என்பதற்குச் சம்மதியும் அதில்தானே :

விஸ்வம் குணாத்மகம் ஸாந்தம் வோரம் மூஷாத்மகம்யயா ||

மோகினியே நித்தியம் என்றதும் ஆமோக்ஷஸ்தாயி யாகையினாலும், குணகுணிபேதோபசாரத்தினாலும் ; ஆகையினாலே, மூலோபாதான காரணம் மகாமாயை ஏகமே யென்பதற்கும் சற்காரிய வாதத்திற்கும் விரோதமில்லை. ருஎ

சுத்தமாம் விந்துத் தன்னிற் றோன்றிய ஆத லானும்
சத்திதான் பிரேரித் துப்பின் தானதிட் டித்துக் கொண்டே
அத்தினாற் புத்தி முத்தி யளித்தலால் அரனுக் கென்றே
வைத்ததாம் மந்தி ரங்கள் வடிவென மறைக ளெல்லாம். 78

(உரை) சுத்தமாம் விந்துத்தன்னில் தோன்றிய ஆதலானும் - சுத்தமாயை யென்று பெயரையுடைய விந்துவிலே தோன்றினதாகையாலும் ; சத்திதான் பிரேரித்துப்பின்...அளித்தலால் - சிவசத்தியானது மந்திரங்களைத் தோற்றுவித்து அனுப்பிரவிஷ்டமாய் மந்திரங்களை யதிஷ்டானமாய் நின்று பிரேரித்து உபாசகர்க்குப் போகமோக்ஷத்தைக் கொடுத்தலுண்டாகையால் ; அரனுக்கென்றே வைத்தாம் மந்திரங்கள் வடிவென மறைகளெல்லாம் - அரனுக்கு மந்திரரூபமென்று வேதங்களாற் சொல்லப்பட்டது. ருஅ

மேல் பஞ்சமந்திர தனுவென் றுணர்த்துகின்றது.

மந்திர மதனிற் பஞ்ச மந்திரம் வடிவ மாகத்
தந்திரஞ் சொன்ன வாறிங் கென்னெனிற் சாற்றக் கேள்நீ
முந்திய தோற்றத் தாலும் மந்திர மூலத் தாலும்
அந்தமில் சத்தி யாதிக் கிசைத்தலும் ஆகு மன்றே. 79

(உரை) மந்திர மதனிற்...கேள்நீ - சத்தகோடி மகா மந்திரங்களிலும் பஞ்சப் பிரம மந்திரமே சிவனுக்குத் திருமேனியாக ஆகமம் சொன்ன தென்னை என்னின், சொல்லக்கேள் ; முந்திய தோற்றத்தாலும்...ஆகும் அன்றே - பராசத்தி முதலாகிய பஞ்ச சத்திகளால் சுத்த மாயையிலே பஞ்ச மந்திரங்களும் முதற்றோன்

றுகையினுலும், நின்ற மந்திரங்களுக்கெல்லாம் இந்த ஐந்து மந்திரங் களுங் காரணமாகையினுலும், முடிவற்ற பஞ்ச சத்திகள் விக்கிரகத் துக் காதியாகிய சதாசிவத்திற்குத் திருமேனியாகக் கூட்டி நிற்கையாலும், பஞ்ச மந்திரங்களே சிவனுக்குத் தனுவாகச் சொன்னதென் றறிவாயாக.

சிவனுக்கு மந்திரதனுவும் மாயாதனுவு மில்லாமல் [1]சித் சொரூபமேயா யிருக்கவும், சாதகருடைய தியானபூசைகள் நிமித்த மாகச் சொல்லப்பட்ட பஞ்ச மந்திரதனு உபசாரமல்லது ஸ்வபாவ மல்ல. பஞ்ச மந்திரமாவது, அனுக்கிரக திரோதான சங்கார ஸ்திதி சிருஷ்டியார்த்தமாக ஈசான தத்புருஷ அகோர வாமதேவ சத்தியோசாதங்கள் மூர்த்தா வக்த்ர ஹிருதய குஹ்ய மூர்த்திக ளாகச் சொல்லப்பட்டது.

தான் சர்வோத்க்ருஷ்டமுமாய் தத் பதத்தை ஆன்மாக்களுக் குக் கொடுக்கையினுலே, ஈசானம் மூர்த்தா என்றது. விந்து நாத விருத்தியான சப்த ஜாலங்களைச் சகத்திலே பூரிக்கையினுலே, தத் புருஷம் வக்த்ரம் என்றது. கோரமென்றது அஞ்ஞானம்; தத் விரோதியா யிருக்கிற ஞானம் அகோரம்; அகோரம் ஹிருதய பரி யாய மாகையால், அகோரம் ஹிருதயம் என்றது. சர்வான்மாக்க ளுக்கும் பிந்து விருத்தியாகிய விஞ்ஞானுதிகளை உற்பவிக்கையாலும் இது சூக்கும கிருத்தியமாகையாலும், வாமதேவம் குஹ்யம் என் றது. விஞ்ஞானுந்த கோசமாகிய காரணதேகம் ஆன்மாக்களுக்கு முதலுண்டா யுள்ளளவில் மனோமயாதி கோசத்திரயமான சூக்கும தூல சரீரங்களைத் தம்முடைய இச்சா மாத்திரத்தினுலே மந்திரே சுவர மந்திரங்களை அதிஷ்டித்து உடனே உண்டாக்குகையினுலே, சத்தியோஜாதம் மூர்த்தி என்றது. இந்த மந்திரங்களைந்தும் ஐந்து சத்திகள்.

ஹாரிணி, ஜனனி, ரோதயித்திரி என்னும் மூன்று சத்திகளும் பரிக்கிரக சத்திகள். ஆக, சத்திகள் எட்டு.

இதில், ஹாரிணியானது, ஆன்மாக்களுடைய தனு கரணுதி சர்வத்தையும் மாயையிலே உபசங்காரம் பண்ணுவதும் செய்து,

[1]சித்சொரூபம் - ஞானசொரூபம்.

[1]பக்குவ மலரைப் பரசிவத்திலே அடைவிப்பிக்கையும் செய்யுமாகையால், சங்காரமும் அனுக்கிரகமும் ஹாரணியினுடைய கிருத்தியமாயிருக்கும். ஜனனியானது, சகத்துற்பத்தியைப் பண்ணுகிற ஸ்வபாவமாயிருக்கும். ரோதயித்திரியானது, ஸ்திதி காலத்திலே ஆன்மாக்களுக்குப் போக நியமனத்தையும், பிரளயத்திலே சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர் இவர்களை மாயாதோபாகத்திலும் மாயாமத்தியதையிலும் மாயோபரியிலும் வாசநியமந்தத்தையும் பண்ணுவிக்கும்.

தத் உக்தம்—

மாயாதூவூரே சாந்தே க்ரமேணைஷா வ்யவஸ்திதி।

ஆகையால், ஸ்திதியும் திரோதானமும் ரோதயித்திரியினுடைய கிருத்தியமாயிருக்கும்.

இஃதன்றியும் ஹிருதயாதி ஆறங்கமும், மூர்த்தாதிகளைப்போல உபசாரமே. அவையாவன:—அஸ்தித்வம்: அஃது உண்மையான சுபாவசத்தி; அது ஹிருதயம். ஸர்வோத்தர குணமாகிற நித்ய த்ருத்தியாகிற சத்தி சிரசு. மாயையில் சர்வரையும் வசீகரித்துக் கொண்டு தன்னொத்தாருக்கும் வஸவ்ருத்தியாகாமலிருக்கிற சத்தி சிகையுமாம். தன்னையுந் தானே ரட்சித்துக் கொண்டு, அன்னியரையும் ரட்சிக்கிற சத்தியே கவசம். சர்வ சகத்திற்கும் மூலமாயிருக்கிற சத்தி நேத்திரம். பக்தருடைய அஞ்ஞானங்களை ஹரிக்கிற பிரதாப சத்தியே அஸ்திரம். இவ்வாறு உபசார கல்பனையேயொழிய, சிவனுக்கு வாஸ்தவமாகச் சரீரமில்லை.

தத் உக்தம் வாதுளே—

யோகீநாம்ச யதீநாம்ச த்யாநிநாம் மந்த்ரிணாம் ததா।

த்யாநபூஜா நிமித்தாய நிஷ்களம் ஸகலம் ஹவேத்॥

ஈஶாநபுருஷா கோர வாம ஜாதாதிகா: க்ரமாத்।

ஏதா: ஸதாஶிவா வஸ்தா—இதி॥

---

[1]பக்குவ மலர் - மலபரிபாகம் வரப் பெற்றவர்கள்.

## சைவ சித்தாந்த சபை, தூத்துக்குடி

சித்தாந்த ஆசிரியர் உயர்திரு-ந. சிவகுருநாத பிள்ளையவர்களின் 70-ஆம் ஆண்டுப் பிறப்புநாள் 17-7-42 வெள்ளிக்கிழமை பூர நாளன்று கொண்டாடப்பெற்றது. சபையின் உறுப்பினர்கள் ஆசிரியரவர்களுடன் சென்று சிவாலய வழிபாடு செய்துள்ளார்கள். சபையின் நிலையமான திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் மடாலயத்தில் வழிபாட்டின் பின்னர் அமைச்சர் திருவாளர் A. பேச்சு முத்துப் பிள்ளையவர்களாலும், மருத்துவமணி திருவாளர் K. திருமலையப்பப் பிள்ளையவர்களாலும், ஆசிரியரவர்கள் தமது இளம் பருவம் தொடங்கிச் சித்தாந்த சைவத்துக்கும், தண்டமிழுக்கும் ஆற்றிவரும் தொண்டு பற்றியும், சைவ சித்தாந்த சபையைத் தமது உயிரினும் சிறப்பாகப் போற்றி வருவது பற்றியும் புகழ்ந்து பேசப் பெற்றது. ஆசிரியரவர்கட்கு உடல் நலனையும் நீண்டவாணாளையும் அளித்தருளும் வண்ணம் சபையாரால் பிரார்த்தனை செய்யப் பெற்றது.

21-7-42 செவ்வாய்க்கிழமை சுவாதி நாளன்று காலையில் சிவாலயத்தில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசையை முன்னிட்டு, சுவாமிக்கும், ஸ்ரீ சேரமான் பெருமாணாயனாருக்கும், திருமுழுக்கும், இரவில் சுவாமி வெள்ளையானை வாகனத்திலும், ஸ்ரீ சேரமான்பெருமாள் குதிரை வாகனத்திலும் எழுந்தருளும் திருவோலக்கமும், கைலைசேர்ந்த ஐதீக விழாவும் நடைபெற்றன. சபையின் நிலையமான திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் மடாலயத்திலும் சிறப்பு வழிபாடு செய்யப்பெற்றது. ஒரு வாரமாகப் படிக்கப் பெற்று வந்த சுவாமிகள் புராணம் அன்று நிறைவுசெய்யப்பட்டது.

---

### பழநி சைவ சித்தாந்த சபை

## ஞானியாரடிகள் உருவப்படத் திறப்பு விழா

விசு ஷு தைப்பூசத்தன்று (1—2—1942) இறைவன் திருவடி நிழலையடைந்த திருக்கோவலூராதீனம் ஸ்ரீ சிவசண்முக மெய்ஞ் ஞான சிவாசாரியார் அவர்களது திருவுருவப்படம் சித்திரபானு ஷு ஆடிமீ 22உ (6—8—42) வியாழக்கிழமை மாலை 6 மணிக்குப் பழநி ஊர்க்கோயில் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி சந்நிதியின் முன்பு, கோவை, உயர்திரு T. A. இராமலிங்கம் செட்டியார், அவர்கள் B. A., B. L., M. L. C. திறந்து வைத்தார்கள்.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 15. No. 8

# சமாஜ வெளியீடுகள்

# CATALOGUE OF SAMAJAM BOOKS

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| அப்பர் தேவாரம் | ... | 1 | 0 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் | .... | 0 | 12 |
| திருவாசகம் ,, | .... | 0 | 10 |
| ,, (பல ஆராய்ச்சி அகராதிகளுடன்) | .... | 0 | 12 |
| திருவாசகம் மூலம் | ... | 0 | 2½ |
| திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு—குறிப்புரையுடன் | .... | 0 | 9 |
| அ, கூ திருமுறைகள் ,, | .... | 1 | 2 |
| திருமந்திரம் — (இரண்டாம் பதிப்பு) | .... | 1 | 0 |
| பதினோராந் திருமுறை ,, | .... | 0 | 11 |
| பெரியபுராணம் ,, | .... | 1 | 6 |
| மெய்கண்டாரும் சிவஞான போதமும் | .... | 0 | 8 |
| சங்கநூற்புலவரகராதி | .... | 0 | 1 |
| தலயாத்திரைப் படம் | .... | 0 | 1 |
| திருப்புகழ் (அருணகிரியார் அருளியவை முற்றும்) | | 3 | 0 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை | ... | 0 | 10 |
| சீவக சிந்தாமணி | .... | 1 | 8 |
| சிவஞானபாடியம் | .... | 1 | 0 |
| சிவஞானபோதச் சிற்றுரை | .... | 0 | 8 |
| சிவஞான சித்தியார் உரை | .... | 0 | 12 |
| சிவப்பிரகாசம் மூலமும் உரையும் | .... | 1 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் | .... | 1 | 0 |
| சித்தாந்த சாத்திரம் மூலமும் உரையும் | .... | 3 | 0 |

தபாற்கூலி, பார்சல் செலவு முதலியன வாங்குவோர் செலுத்த வேண்டும். முன்பணம் அனுப்புக.

**சைவ சித்தாந்த மகா சமாஜம்**
22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, by T. V. Volaganathan (Publisher) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.